**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2021**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Father/Husband's Name : பழனிச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது நெய்காரப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சரஸ்வதி எனது மாமியார் ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் எனது மாமியார் அளித்தார். அவருடன் நானும் இருந்தேன். கடந்த 28.06.2021ம் தேதி மாலை சுமார் 7.00 மணியளவில் கரடிக்கோட்டம், ஆஞ்சிநேயர் கோவில் அருகே பழனி – கொழுமம் ரோட்டில் எனது மாமியார் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டை கடக்கும்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த TVS Apache TN 94 0376 என்ற இருசக்கர வாகனம் Full Speedல் வந்து எனது மாமியார் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். நான் அப்போது அதே ரோட்டில் 30 அடி தொலைவில் இருந்தேன். மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். விபத்து ஏற்படுத்திய நபரை தூக்கி பார்த்தபோது அவருக்கு அடி இல்லை, எனது மாமியாருக்கு வலது காலில் அடிப்பட்டிருந்தது. மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபரை பார்த்தால் அடையாளம் தெரியும். ஆஜர் எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். பின்னர் எனது மாமியார் சரஸ்வதியை 108 ஆம்புலன்ஸ் மூலம் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு எனது மனைவி மற்றும் மைத்துனர்களுக்கு தகவல் சொன்னேன். பின்னர் பழனி அரசு மருத்துவமனையில் முடியாது என சொன்னதால் அன்றே இரவு 8.00 மணியளவில் மதுரை அரசு மருத்துவமனைக்கு எனது மாமியாரை கொண்டு சென்று சிகிச்சைக்கு**

சேர்த்தோம். போலிசார் எனது மாமியாரை பழனி அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் பழனி அரசு மருத்துவமனையில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். எனது மாமியாருக்கு காலில் எலும்பு முறிவும், தலையிலும் அடிபட்டதால் 30ம் தேதி 6வது மாதம் 2021ம் வருடம் இறந்துவிட்டார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:19:12 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2021**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : ராமர்** | **Father/Husband's Name : பழனிச்சாமித் தேவர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரடிகோட்டத்தில் குடியிருந்து சிவா டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சரஸ்வதி என்பவரை எனக்கு தெரியும். அவர் டீ வாங்க வருவார். அ.சா.1 ராஜா என்பவரை எனக்கு தெரியும். அவர் சரஸ்வதியின் மருமகன். தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் டீ போட்டு கொண்டிருநத்போது சரஸ்வதிக்கு அடிப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். நான் ஓடிபோய் பார்த்தேன். 108 ஆம்புலன்ஸில் கொண்டு சென்றார்கள். பைக் அடித்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த பைக் ஓட்டியவரை எனக்கு தெரியாது, ஒரு பையன் என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அடிபட்டு விட்டார் என்று கேள்விபட்டு தான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:19:18 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2021**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : முருகாம்பாள்** | **Father/Husband's Name : ராஜா** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது நெய்காரப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். வழக்கில் இறந்துபோன சரஸ்வதி எனது தாயார். கடந்த 28.06.2021 ம் தேதி இரவு 7.30 மணிக்கு எனது அம்மா கரடிகோட்டம் அருகே பழனி – கொழுமம் ரோட்டில் தெற்கில் இருந்து வடக்காக ரோட்டை கடக்கும்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என கேள்விப்பட்டு எனது அம்மாவை பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனது கணவர் எனக்கு தகவல் சொன்னார். நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அம்மாவை பார்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். மறுநாள் எனது அம்மா இறந்துவிட்டார். எனது அம்மாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் சம்பவம் நடந்தபோது வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் சொல்லி பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து வழக்கில் இறந்துபோன சரஸ்வதியை பார்த்தேன் என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:19:23 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2021**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : ராமசாமி** | **Father/Husband's Name : பொன்னுசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது நெய்காரப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கையின் கணவர். அ.சா.3 எனது தங்கை. வழக்கில் இறந்துபோன சரஸ்வதி எனது தாயார். கடந்த 28.06.2021 ம் தேதி இரவு 7.30 மணிக்கு எனது அம்மா கரடிகோட்டம் அருகே பழனி – கொழுமம் ரோட்டில் தெற்கில் இருந்து வடக்காக ரோட்டை கடக்கும்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என கேள்விப்பட்டு எனது அம்மாவை பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனது தங்கையின் கணவர் எனக்கு தகவல் சொன்னார். நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது அம்மாவை பார்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். மறுநாள் எனது அம்மா இறந்துவிட்டார். எனது அம்மாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**2. நான் சம்பவம் நடந்தபோது வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் சொல்லி பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து வழக்கில் இறந்துபோன சரஸ்வதியை பார்த்தேன் என்றால் சரிதான்.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:19:28 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2021**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : சுப்பராயலு** | **Father/Husband's Name : பரமசிவம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி கரடிகூட்டத்தில் குடியிருந்து நூற்பாலையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 29.06.2021ம் தேதி இரவு 7 – 7.30 மணியளவில் நானும், ரமேஷ் என்பவரும் பழனி கரடிக்கூட்டம், ஆஞ்சிநேயர் கோவில் அருகே உள்ள டீ கடையில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. பார்வை மகஜரில் எழுதியுள்ள விபரம் தெரியுமா என்றால் சரஸ்வதி என்பவருக்கு விபத்து நடந்தது தொடர்பாக விசாரித்து கையொப்பம் கேட்டார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்யாமல் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவயிடத்தில் விசாரித்துவிட்டு காவல் நிலையத்தில் வந்து கையொப்பம் வாங்கினார்கள். சரஸ்வதி எனக்கு என்ன உறவு என்றால் உறவினர் அல்ல, தெரிந்தவர்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:19:34 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**